# Principal District Munsif Court, Sankarankovil.

தேதி : 25.11.2024

அ.வ.எண்.221/2016

பி.வா.சா.1 – முருகேஸ்வரி

**பி.வா.சா.1 மீண்டும் ஆஜர். சத்தியபிரமாண வாக்குமூலத்தின்பேரில் வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை** :-

எனக்கு சொந்த ஊர் சென்னிகுளம் கிராமம். தற்போது தூத்துக்குடி மாவட்டத்தில் குடியிருந்து வருகிறேன். எனக்கு எழுதப்படிக்கத் தெரியும். வாதிகள் எனது சித்தப்பா காளிமுத்துவின் பிள்ளைகள் என்றால் சரிதான். எனது தந்தை குருசாமிக் கோனாரும் வாதிகளின் தகப்பனார் காளிமுத்து என்பவரும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். என் சித்தப்பா காளிமுத்து வாய் பேச முடியாத ஊமை என்றால் சரிதான். காளிமுத்துவின் மனைவி முத்தும்மாளும் வாய் பேச முடியாத ஊமை என்றால் சரியல்ல. அவர் நன்றாகப் பேசுவார். காளிமுத்துவின் மனைவி முத்தம்மாளுக்கு வாய் பேச முடியாத ஊமை என்றாலும் நான் தற்போது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கின் 2ம் வாதி வெயிலுகந்தாள் வாய் பேச முடியாதவர் என்றால் சரிதான். அவருக்கு காது கேட்கும். வழக்குச் சொத்துக்கள் நாங்கள் எதிர் வழக்குரையில் சொல்லியுள்ள மற்ற சொத்துக்களும் என் தாத்தா குருசாமிக்கோனார் என்பவருக்கு சுயமாய் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். என் தந்தையும் என் சித்தப்பாவும் சொத்துக்கள் எதையும் சுயமாக கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நாங்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளோம். எனது தாத்தா குருசாமிக்கோனாரின் பாத்தியப்பட்ட சொத்துக்களை எனது தந்தை குருசாமிக்கோனாரும் என் சித்தப்பா காளிமுத்துவும் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு பாகம் பிரித்துக்கொண்டதில் அவரவருக்கு கொடுக்கப்பட்ட சொத்தை அவரவர் தனித்தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். என் சித்தப்பா காளிமுத்துவுக்கு பாகம் மூலம் கிடைத்த சொத்தை அவர் தன்னுடைய பிள்ளைகளான வாதிகளுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அதைப் பற்றி எனக்குத் தெரியாது. என் தந்தையுடன் பிறந்த முத்துச்செல்வம் என்ற ஒரு சகோதரி உள்ளார் என்றால் சரிதான்.

என் தந்தையும் சித்தப்பாவும் பாகம் பிரித்தக் கொண்ட பிறகு தான் மேற்சொன்ன முத்துச்செல்வத்திற்கு திருமணம் ஆனது என்றால் சரியல்ல. எனது தந்தையுடன் பிறந்த சகோதரிகளுக்கு திருமணம் ஆனபிறகு தான் பாகம் பிரித்துக்கொண்டார்கள். என் அத்தை முத்துச்செல்வத்திற்கு திருமணம் ஆகி 40 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. என் தாயார் பேச்சியம்மாள் எங்கள் பெயருக்கு எழுதிக்கொடுத்து பி.வா.சா.ஆ.3 செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட சொத்து எனது தாயாருக்கு எப்படிப் பாத்தியப்பட்டது என்றால் அந்தச் சொத்துக்களை என் தாத்தா என் தாயார் பெயருக்கு உயில் எழுதி வைத்துள்ளார். அதன்படி எனது தாயாருக்கு பாத்தியப்பட்டது. நான் சொல்லும் உயிலின்படி தான் அந்தச் சொத்து என் தாயாருக்குப் பாத்தியப்பட்டது என சொல்கிறேனா என்றால் ஆமாம். உயிலில் கண்ட சொத்துக்களுக்கு என் தாயாரின் பெயரில் பட்டா ஏற்பட்டதா என்றால் இல்லை. அந்தச் சொத்திற்கு தீர்வை யார் பெயரில்இருந்தது என்றால் என் தாயார் பெயரில் இருந்தது. என் தாயார் பெயரில் உள்ள தீர்வை ரசீதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. வழக்குச் சொத்து உள்ளிட்ட அனைத்து சொத்துக்களுக்கும் எனது தாத்தா குருசாமி பெயரில் தான் பட்டா இருக்கிறது என்றால் சரிதான். என் தாத்தா என் தாயார் பெயருக்கு எழுதி வைத்ததாக சொல்லும் உயில் மோசடியானது என்றாலும் அந்த உயில் ஆவணம் ஊர்ஜிதத்திற்கு வரவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி உயில் ஊர்ஜிதத்திற்கு வந்திருந்தால், உயிலில் கண்ட சொத்திற்கு என் தாயார் பெயரில் பட்டா மாறியிருக்கும் என்றாலும் உயில் ஆவணம் ஊர்ஜிதத்திற்கு வராததால் தான் என் தாயார் பெயரில் பட்டா மாறவில்லை என்றாலும் சரியல்ல. என் தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் சுமார் 11 ஏக்கர் இருக்கும் என்றால் எனக்குச் சரியாகத் தெரியவில்லை. என் தாத்தாவின் மொத்தச் சொத்துக்களையும் மோசடியாக உயில் ஆவணத்தில் காண்பித்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தந்தையும் என் சகோதரியும் 2010 ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் எனக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார்கள். மேற்சொன்ன செட்டில்மெண்ட்டை எழுதும்போது என் தாயாரும் என் தந்தையும் உயிருடன் தான் இருந்தார்கள் என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ.4 பாகவிடுதலை ஆவணத்தில் கண்ட சொத்தை என் தந்தையும், என் உடன்பிறந்த சகோதரிகளும் என் பெயருக்கு பாகவிடுதலை ஆவணம் எழுதிக்கொடுக்க வேண்டிய அவசியம் என்னவென்றால், என் தாயாரால் சொத்துக்களை பயிர் செய்ய முடியாததால் என்னை பயிர் செய்துகொள்ளும்படி பாகவிடுதலை ஆவணத்தில் எழுதிக்கொடுத்தார்கள். வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக நாங்கள் மாறி மாறி ஆவணத்தை உற்பத்தி செய்து பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 16.11.2010 ம் தேதிய பாகவிடுதலை ஆவணம் வழக்குச் சொத்தில் வாதிகளின் உரிமையை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. என் தாத்தா குருசாமிக்கோனாரின் அனைத்து சொத்துக்களும் என்னுடைய அனுபவத்தில் உள்ளதா என்றால் 5 சர்வே எண்களில் உள்ள என்னுடைய அனுபவத்தில் உள்ளது. 2 சர்வே எண்களில் உள்ள சொத்து என் தங்கை ராமலட்சுமியிடம் உள்ளது. என் அப்பாவிற்கும் என் சித்தப்பாவிற்கும் நடந்த பாகப்பிரிவினையில் எனது அப்பாவிற்கு பாகமாக கிடைத்த சொத்து மட்டும் தான் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். என் சித்தப்பாவிற்கு பாகமாக கிடைத்த சொத்தை எனது சித்தப்பாதான் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். எனது சித்தப்பாவிற்கு பாகமாக கிடைத்த சொத்தை நாங்கள் ஏன் இடையூறு செய்கிறோம் என்றால் நாங்கள் எந்த இடையூறும் செய்யவில்லை. என் தாயார் பெயரில் உள்ள உயில் ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் வாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. என் சித்தப்பா காளிமுத்துவிற்கு பாகமாக கிடைத்த சொத்துக்களை 16.04.2008 ம் தேதியில் பதிவு செட்டில்மெண்ட் மூலம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. எனது சித்தப்பா காளிமுத்துவிற்கு பாகமாக கிடைத்த சொத்துக்களில் நாங்கள் பிரச்சனை செய்யவில்லை. எனது சித்தப்பாவிற்கு பாகமாக கிடைத்த சொத்தை அவர் அவருடைய மகள்களான வாதிகள் பெயருக்கே செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்து வாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் அவர்களுடைய சொத்தை அவர்கள் அனுபவித்து வருகிறார்கள். என் தாத்தாவும் பாட்டியும் இறக்கும்காலம் வரையில் என் தந்தையுடன் தான் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான். என் தாத்தா, பாட்டியின் வயோதிகத்தைப் பயன்படுத்தி என் தந்தை உயில் ஆவணத்தை மோசடியாக தயாரித்துக்கொண்டார் என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.2 உயில் ஆவணம் எந்தக் காலத்திலும் ஊர்ஜிதத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. மோசடியான உயிலை வைத்துக்கொண்டு நாங்கள் வாதிகளுக்கு இடையூறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. நாங்கள் இடையூறு செய்ததால்தான் வாதிகள் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்து சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டதால், வாதிகள் என் மீதும், என் தகப்பனார் மீதும் கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. நான் தான் புகார் கொடுத்தேன். காவல் நிலைய விசாரணையில், நாங்கள் மோசடியான உயிலை தயாரித்து, வாதிகளிடம் இடையூறு செய்யக்கூடாது என எங்களிடம் எழுதி வாங்கினார்கள் என்றால் சரியல்ல. என் தாயார் என் பெயருக்கு 16.11.2010 ல் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார். அதன் அடிப்படையில் என் பெயருக்கு பட்டா ஏற்பட்டது. இந்த வழக்கைத் தாக்கல் செய்வதற்கு முன்பு 2016 ம் ஆண்டு என் பெயரில் ஏற்பட்டுள்ள பட்டாவைக் குறித்து வாதிகளுக்கு தெரியவந்தது என்றால் சரியல்ல. பட்டா என் பெயரில் இருப்பதை வைத்து மட்டுமே சொத்து எனக்குப் பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. வாதிகள் கோரியபடி, பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. வாதிகளின் வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.